**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 346 நாள்: 31.07.2026

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மின் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக அலுவலர்களுக்கான பயிற்சி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மின் ஒப்பந்தப்புள்ளி தொடர்புடைய பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அனைத்து பொறியாளர்கள், முதுநிலை கணக்கு அலுவலர், நிர்வாக அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சியினை 28.07.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், தொடங்கி வைத்தார். 28.07.2026 (காலை 9.30 மணி முதல் மாலை 6.00 வரை) முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இறுதி பயிற்சி வகுப்பு 5ஆவது நாளாக நாளையுடன் (01.08.2026) நிறைவடைகிறது. இப்பயிற்சியின் மூலம் தினசரி 250 நபர்களுக்கு என ஐந்து நாட்களில் 1,250 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில், ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகள், மின்ஒப்பந்தப்புள்ளி மற்றும் GePNic, ஒப்பந்தப்புள்ளி தொடர்பான TNULB விதிகள், நகரத் திட்டமிடல் விதிகள், திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பாடங்கள், சட்ட நடைமுறை, பதிவேடுகள், செயலி, மின் ஆளுமை மற்றும் மின்அலுவலகம், ஆகிய தலைப்புகளில் பயிற்சி வகுப்பு நடத்தபட்டது. இப்பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்து நடைபெறும்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**